No. of Printed Pages : 7

**3751**

பதிவு எண் | | | | | | | |

540472

# தமிழ் - முதல் தாள்

# Language — Part A — TAMIL — Paper I

**(செய்யுள், உரைநடை)**

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **49** -க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : **6x1=6**

**1.** __________ நூல்களுள் ஒன்று புறநானூறு

(அ) பதினெண் கீழ்க் கணக்கு

(ஆ) எட்டுத் தொகை

(இ) பத்துப்பாட்டு

**2.** முதலிலார்க்கு __________ இல்லை.

(அ) ஊதியம் (ஆ) நட்பு (இ) பகை

**3.** கம்பராமாயணம் __________ காண்டங்களைக் கொண்டது.

(அ) ஐந்து (ஆ) ஆறு (இ) மூன்று

[ திருப்புக

4. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது நம் சமுதாயத்தில் தலைகீழ் புரட்சி ஏற்படும் என்று கூறியவர் :
(அ) திரு. வி.க. (ஆ) பெரியார் (இ) பாரதிதாசன்

5. பகைவனிடமும் அன்பு காட்டு எனக் கூறிய நூல் ________
(அ) பகவத் கீதை (ஆ) நன்னூல் (இ) பைபிள்

6. வள்ளலாரின் இயற்பெயர் :
(அ) இராமலிங்கர் (ஆ) தாயுமானவர் (இ) சம்பந்தர்

## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக : 6x1

7. நாலாயிரம் திவ்வியப் பிரபந்தத்தில் ________ குலசேகரர் பாடியதாகும்.

8. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோன்றக் காரணமானவர் ________ .

9. போலிப் புலவர்களின் செவியை அறுப்பவர் ________ .

10. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ________.

11. கல்வி கற்பிப்பதற்கென உருவாக்கப்படும் படங்கள் ________.

12. ‘உடம்பார் அழியின் உயிரார் அழிவர்’ என்பார் ________ .

## பகுதி-3

பொருத்துக : 4x1

| | | |
|---|---|---|
| 13. தேவாரம் | - | கணிமேதாவியார் |
| 14. சிலப்பதிகாரம் | - | சேக்கிழார் |
| 15. பெரியபுராணம் | - | இளங்கோவடிகள் |
| 16. ஏலாதி | - | திருநாவுக்கரசர் |

### பகுதி-4

விடைக்கேற்ற வினா அமைக்க : 4x1=4

17. தொடக்கம், இடைப்பகுதி, முடிவு என்பன பேச்சின் முக்கூறுகள்.

18. உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள்.

19. இலெமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்.

20. இடைநிலை ஆசிரியர் பயிற்சி ஈராண்டுகள் ஆகும்.

### பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5x2=10

21. ஞாலம் கருதினும் கை கூடும். எப்போது?

22. திருவள்ளுவருக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

23. ''அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்'' யார் யாரிடம் கூறியது?

24. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன?

25. நன் னெறி விதைகள் யாவை?

26. வேந்தர்க்குரிய பொருள்கள் யாவை?

27. ஆற்றுதல் என்பது யாது?

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : **5x2=10**

28. ஒரு மொழி நிலை பெற்றிருப்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை?

29. திரைப்படச் சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை?

30. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?

31. அணு பற்றிய கம்பரின் கருத்து யாது?

32. காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர் பண்புகள் யாவை?

33. வளரும் பிள்ளைகளுக்கு வள்ளலார் வழங்கிய அறிவுரைகள் இரண்டினை எழுதுக?

34. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை?

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

## பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க :

**3x4=12**

35. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?

36. கண்ணகி குறித்து வாயிற் காவலன் கூறியவற்றை எழுதுக.

37. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியது என்ன?

38. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

39. 'நிற்க நேரமில்லை' என்று சாலை இளந்திரையன் கூறக் காரணம் யாது?

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க :

3x4=12

40. பெண் கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துக்கள் யாவை?

41. அம்பேத்கர் சட்ட மாமேதை என அழைக்கப்படக் காரணம் யாது?

42. பேச்சுக் கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும்?

43. தொன்மைத் தமிழகத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் எவ்வாறு நடைபெற்றன?

44. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

பதிதொறு புயல்பொழி தருமலரி பணைதரு
பருமணி பகராநெற்
கதிர்தொடு வருபுனல் கரைபொரு திழிதரு
காவிரி வளநாடா
நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
இவையிவை யிடைநந்தி
மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
வானகம் ஆள்வாரே

(i) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?

(ii) பணை என்னும் சொல்லின் பொருள் யாது?

(iii) நீர் என்ற பொருள் தரும் சொல்லை பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

(iv) யாருடைய திருவடிகளை வணங்குதல் வேண்டும்?

(v) இப்பாடலில் வந்துள்ள அடிஎதுகைகளை எழுதுக.

[ திருப்புக

46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

இராமலிங்கர் அருளிய பாடல்கள் அருட்கருணை நிறைந்தவை. ஆறு தொகுதிகள் கொண்ட இவரது பாடல்களைத் 'திருவருட்பா' என மக்கள் போற்றுகின்றனர். இவர் உருவ வழிபாட்டை நீக்கி, ஒளி வழிபாட்டை மக்கள் பின்பற்றச் செய்தார். அதற்காகவே வடலூரில் சத்திய ஞானசபையை நிறுவினார். மேலும், மக்கள் அறியாமை நீங்கி அறிவு ஒளி பெற, சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார். இதனால் தான் பாரதியார் இவரைப் ''புது நெறிகண்ட புலவர்'' என்று போற்றினார்.

(i) இராமலிங்கர் அருளிய பாடல்கள் எத்தகையவை?

(ii) இராமலிங்கரின் பாடல்களை மக்கள் எவ்வாறு போற்றுகின்றனர்?

(iii) சத்தியஞான சபை எங்குள்ளது?

(iv) பாரதியார் இராமலிங்கரை எவ்வாறு போற்றினார்?

(v) சோதி தரிசனப் புதுமையை வள்ளலார் ஏன் புகுத்தினார்?

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 2x8=16

47. (அ) அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததனை விவரிக்க.

**அல்லது**

(ஆ) பொருள் செயல்வகை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

48. (அ) தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி என்னும் கூற்றை நிறுவ 5 சான்றுகள் தருக.

**அல்லது**

(ஆ) தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதனை விளக்குக.

## பகுதி - 2

49. செய்யுள் வடிவில் விடை தருக : 2+2+6=10

(அ) 'பகல் வெல்லும்' - எனத் தொடங்கும் குறள்.

(ஆ) 'விடல்' - என முடியும் குறள்.

(இ) 'வாயிற் கடைமணி' - எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

-o0o-